---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாலிந்தநுவர பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பாலிந்தநுவர பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப்

பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நியமத்தின் 03 ஆம் அத்தியாயத்தின் 3.28 பந்தியின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சலைக் கணிப்பிடும் போது வருடத்திற்கான பற்றாக்குறை ரூபா 10,399,011 இற்குப் பதிலாக ரூபா 3,057,934 ஆன அதாவது பெறுமதியான ஏனைய பெறுமதி ஒன்று ஈடுபடுத்தப்பட்டமையும் தொழிற்படு மூலதன மாற்றங்களை சீராக்கும் போது இருப்பு அதிகரித்தல் ரூபா 203,324 பற்றாக்குறையில் குறைப்பதற்குப் பதிலாக சேர்க்கப்பட்டிருந்தமையும் பற்றாக்குறை கணிப்பிடும் போது அடிப்படையாகக் கொள்ளப்பட்ட வருடாந்த வட்டி வருமானம் ரூபா 439,740 சீராக்கப்படாமையும் அவதானிக்கப்பட்டது.	2025 ஆம் ஆண்டின் போது காசுப் பாய்ச்சல் கூற்று சரியாகத் தயாரிக்கப்படும்.	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஆ)	நியமத்தின் 3 ஆவது அத்தியாயத்தின் 3.29 ஆம் பந்தியின் பிரகாரம் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் பணமாகக் கிடைத்த ரூபா 702,828 ஆன வட்டி வருமானத்திற்கு பதிலாக ரூபா 10,967,892 அதாவது ரூபா 10,265,064 அதிகரித்து சீராக்கப்பட்டிருந்தது.	மேற்படி	மேற்படி
(இ)	நியமத்தின் 03 ஆம் அத்தியாயத்தின் 3.30 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியீட்டல் செயற்பாடுகளின் கீழ் ஆண்டில் பணமாகக் கிடைத்த ரூபா 12,922,977 ஆன மூலதன மாணியப் பெறுமதி ரூபா 13,120,057 ஆக அதாவது ரூபா 197,080 அதிகரித்து சீராக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது காசுப் பாய்ச்சல் கூற்று சரியாகத் தயாரிக்கப்படும்.	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருமானத்தில் இனங்காணப்படாத மூலதன மாணியக் கணக்கின் மீதி ரூபா 181,988,672 ஆக இருக்க வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 193,407,901 ஆக காண்பிக்கப்பட்டமையால் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 11,419,229 இனால் அதிகரித்து இருந்தது.	2025 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்குகள் சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டிற்காக வருமானத்தில் இனங்காணப்பட வேண்டிய மூலதன மானியப் பெறுமதி ரூபா 12,527,566 ஆக இருக்க வேண்டிய போதிலும் விரிவான வருமானக் கூற்றில் ரூபா 1,859,818 ஆக காண்பிக்கப்பட்டமையால் ஆண்டின் வருமானம் ரூபா 10,667,748 இனால் குறைவடைந்து இருந்தது.	மேற்படி	மூலதன மானியம் கணக்குகளில் சீராக்கப்படல் வேண்டும்.

(இ)	கட்டிடக் கணக்கில் ரூபா 20,883,350 வரவு வைப்பதற்குப் பதிலாக ரூபா 13,908,243 வரவு வைக்கப்பட்டமையால் ஆண்டின் கட்டடம் ரூபா 6,975,107 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	மேற்படி	நாட்குறிப்புக்களின் மூலம் பேரேட்டுக் கணக்குகள் சரியாக சீராக்கப்படல் வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டுக்கு உரிய மோட்டார் வாகன பெறுமானத் தேய்வு, தளாபட பெறுமானத் தேய்வு, பொருத்திகள் பெறுமானத் தேய்வு மற்றும் வீதிகள், மதகுகள் மற்றும் பாலங்களின் பெறுமானத் தேய்வுகளின் கூட்டுமொத்தமாக ரூபா 2,156,456 குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.	மேற்படி	கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.
(உ)	மருந்து நன்கொடை பெறுவனவுகள் ரூபா 953,307 நன்கொடைக் கணக்கு மற்றும் கிடைத்த கழிவுக் கணக்கில் முறையே ரூபா 500,000 மற்றும் ரூபா 453,307 வீதம் செலவு வைக்கப்படாமையால் ஆண்டின் வருமானம் அப் பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	மேற்படி	நாட்குறிப்புக்களின் மூலம் பேரேட்டுக் கணக்குகளில் சரியாக சீராக்கப்படல் வேண்டும்.
(ஊ)	2024 சனவரியில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 700,000 ஆன ஆயுர்வேத இருப்புக்கள் ஆண்டின் இறுதியின் போது ஆயுர்வேத களஞ்சிய முற்பணக் கணக்கில் வரவு வைத்து பொதுப் பேரேட்டில் உள்ளடக்காத மருத்து வழங்கல் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.	மேற்படி	கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.
(எ)	பெறவேண்டிய மூலதன மானியப் பெறுமதி ரூபா 49,123,916 ஆகக்	2025 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி	நாட்குறிப்புக்கள் பேரேட்டுக்

	காண்பிக்கப்பட்ட போதிலும் வேலைப் பட்டோலையின் பிரகாரம் பெற வேண்டிய மூலதன மானியப் பெறுமதி ரூபா 50,012,280 ஆக இருந்ததுடன் அது மூலதன செலவின மானியக் கணக்கில் ரூபா 50,248,304 ஆக செலவிலும் கடன் பட்டோர் கணக்கில் ரூபா 49,123,916 ஆக வரவிலும் பதியப்பட்டமையால் ஆண்டின் மூலதன மானியம் ரூபா 236,024 இனால் அதிகரித்தும், கடன்பட்டோர் ரூபா 888,364 குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்குகளில் சரியாக சீராக்கப்படல் வேண்டும்.
(ஏ)	நிலையான வைப்பு வட்டியாக முறையே ரூபா 389,697 மற்றும் ரூபா 571,430 வட்டி வருமானம் செலவு வைப்பதற்குப் பதிலாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 439,740 ஆக சீராக்கப்பட்டமையால் ஆண்டின் வருமானம் ரூபா 521,387 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	மேற்படி	மேற்படி
(ஐ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் ரூபா 518,910 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் உரிய செலவினப் பேரேட்டுக் கணக்கில் சீராக்கப்படாமையினால் மீளாய்வாண்டின் செலவினம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	மேற்படி	மேற்படி
(ஒ)	தேர்தல் படிக்காக பெறவேண்டி இருந்த ரூபா 481,115 கடன்பட்டோர் வரவு வைத்து வருமான பேரேட்டுக் கணக்கில் செலவு வைக்காமையால் ஆண்டின் வருமானம் அப் பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் பேரேட்டுக் கணக்குகள் சீராக்கப்படும்.	மேற்படி

(ஓ)	ஆதன வரியின் அடிப்படையில் வழங்கப்பட்ட கழிவு ரூபா 144,053 பொதுப் பேரேட்டில் வழங்கப்பட்ட கழிவுக் கணக்கில் சீராக்கப்படாமையால் மீளாய்வாண்டின் செலவினம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	மேற்படி	மேற்படி
(ஔ)	மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்ற மொத்த மூலதன மானியப் பெறுமதி ரூபா 63,368,361 உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றிலும் விரிவான வருமானக் கூற்றிலும் பணமாகக் கிடைத்த மூலதன மானியப் பெறுமதியாக ரூபா 12,922,977 மாத்திரம் சீராக்கப்பட்டிருந்தது.	மேற்படி	மேற்படி
(க)	உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் திரண்ட நிதியத்தின் ஆரம்ப மீதியில் முன்னைய ஆண்டின் தவறாக ரூபா 9,054,985 குறைக்கப்பட்டிருந்த போதிலும் திரண்ட நிதியக் கணக்கில் அவ்வாறான சீராக்கம் மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 241,980,015 ஆகும். உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் அது ரூபா 218,295,047 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சனைகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி

1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
04 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்களின் மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பேரேட்டுக் கணக்குகள் / தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று/ பட்டோலைகள் / குறிப்புக்களில் காண்பிக்கப்படுகின்ற	2025 ஆம் ஆண்டின் போது சரி செய்வதற்கு நவடிக்கை எடுக்கப்படும்.	வேறுபாகளுக்கு உரிய காரணங்களை கண்டறிந்து சரி செய்வதற்கு நவடிக்கை எடுத்தல் வேண்டும்.

மீதிகளுக்கும் இடையே ரூபா 75,111,049 வேறுபாடு தொடர்பாக கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

சட்டங்கள், விதிகள், பிரமானங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2016 திசெம்பர் 29 ஆந் திகதிய இலக்கம் 30/2016 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி	07 வாகனங்களுக்குரிய எரிபொருள் எரிவு பரிசோதனை சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படவில்லை.	2025 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றப்படும்.	தொடர்புயை சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 10,399,010 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 11,327,953 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
i.	ஆதன வரியும் வரியும்	4,310,712	5,639,698	5,947,387	606,437	1,177,000	1,044,980	846,638	378,980
ii.	வாடகை	12,011,300	6,398,083	6,425,719	665,130	5,630,300	7,202,000	6,811,312	850,224
iii.	அனுமதிப்பத்திரக் கட்டணம்	275,000	283,000	367,000	-	1,680,000	1,410,200	1,410,200	281,050
		16,597,012	12,320,781	12,740,106	1,271,567	8,487,300	9,657,180	9,068,150	1,510,254

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ) வாடகை		
(i) 2023 ஆம் ஆண்டு முதல் கொண்வரப்பகின்ற ரூபா 157,458 ஆன மாக்கலிஎல்ல வாகனத் தரிப்பிடம் வாடகை நிலுவை மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் அறவிடப்படும்.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ii)	2013 மற்றும் 2022 ஆம் ஆண்டுகள் முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 382,622 கூட்டுத்தொகையான வாராந்த சந்தைக் கட்டண நிலுவை மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	அதில் ரூபா 95,753 முன்னாள் செயலாளரிடம் இருந்து அறவிட வேண்டியிருந்ததுடன் மீதித் தொகையான ரூபா 286,867 நீதிமன்றத் தீர்ப்பின் அறவிடப்பட்டுள்ளது.	மேற்படி
(iii)	2022 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 105,050 ஆன இறைச்சிக் கடை வாடகை நிலுவை மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	வழக்கிற்காக நடுக்கட்டளை வழங்குவதற்கு வாடகையாளரைக் கண்டறிவதற்கு முடியாது உள்ளது.	மேற்படி
(ஆ)	**ஏனைய வருமானம்**		
	மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டி நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 2,500,000 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 10,000,000 ஆகும்.	பட்டோலைத் தயாரித்து வருமானத்தை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 இனங்காணப்பட்ட நட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2019 திசெம்பர் 31 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் 3.5.2 பந்தியின் பிரகாரம் பெறுமதி ரூபா 23,250 ஆன ஜீஐ குழாய்கள் 21 மற்றும் ரூபா 85,750 ஆன 49 பாக்கிஸ்தான் குழாய்கள் பற்றாக்குறை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த நபர்களை இனங்கண்டு	மீண்டும் பரிசோதனை சபை நியமிக்கப்பட்டுள்ளது.	ஆரம்ப விசாரணைகளை விரைவாக மேற்கொண்டு நட்டம் அறவிடப்படல் வேண்டும்.

நட்டத்தை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2016 பெப்ரவரி 19 ஆம் திகதி இலக்கம் 01/2016 என்ற மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை 1.1.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் பொறுப்பில் சகல வாகனங்களும் நிறுவனத்தில் பெயரில் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் தண்ணீர் பௌசர் மற்றும் டெக்டரின் உரித்து 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.	அரசாங்க அதிபர் அலுவலகத்தின் மூலம் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	1946 இன் 57 ஆம் இலக்க பொது மயான நிலங்கள் மற்றும் தனியார் மயான நிலங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் மயாண நிலங்களைப் பாதுகாக்க பாதுகாப்பு வேலி எல்லை அமைப்பட வேண்டிய போதிலும் சபைக்குரிய எந்த ஒரு மயாண நிலத்திற்கும் வேலி எல்லை அமைக்கப்படாது இருந்ததுடன் 30 மயான நிலங்களின் உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை.	அளவீடு செய்வதற்குத் தேவையான நிதியேற்பாடு ஒதுக்குவதற்காக உள்ளூராட்சி திணைக்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	பொது மயான நிலங்கள் மற்றும் தனியார் மயான நிலங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
தேசிய பெறுகைகள் வழிகாட்டியின் 8.11.6(அ) பிரிவின் பிரகாரம் கேள்விதாரர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற	தற்போது கறுப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.	தொடர்புடைய வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத

கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது இருப்பார்களாயின் அந்த கேள்வி தாரர்களை கறுப்புப் பட்டியலில் இட வேண்டியிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டிற்காக சபைக்குரிய மீன் பலகைக் கடைகளை கேள்வி கோரும் போது உடன்படிக்கையை புறக்கணித்த கேள்விதாரர்கள் மூவர் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.		கேள்விதாரர்களை கறுப்புப் பட்டியலில் இடல் வேண்டும்.

3.4 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நீளம் 83 அடி 06 அங்குலம் மற்றும் அகலம் 26 அடி 10 அங்குலம் ஆன மண்டபத்தின் தரையில் 03 அங்குல கனத்தில் இருக்க வேண்டிய கொங்கிரீட் கனமீற்றர் 15.61 போடுவதற்காக அலகு ஒன்றுக்காக ரூபா 35,527 வீதம் ரூபா 554,576 செலுத்தப்பட்டிருந்த போதிலும் பௌதீகப் பரிசோதனையின் போது கொங்கிரீட்களின் தடிப்பம் 02 அங்குலம் முதல் 2½ அங்குலம் வரை காணப்பட்டமையால் கனமீற்றர் 2.61 இற்கு அலகு ஒன்றிக்கு ரூபா 35,527 வீதம் கூட்டுமொத்தமாக ரூபா 92,725 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.	ஒப்பந்தகாரரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	ஒப்பந்தம் சரியான நியமத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்ததா என மேற்பார்வை செய்ய வேண்டியிருந்ததுடன் மேலதிக கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2023 ஆம் ஆண்டில் ரூபா 2,996,068 செலவில் குழாய்கள் பதிக்கப்பட்ட போதும் உடுவன்கந்த கப்புகெதர பிரதேசத்தில் நீர் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது குழாய்	நீர் மாதிரிகளை பரீட்சித்த பின்னர் நீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செயற்திட்டத்தை பூர்த்தி செய்து மக்களின் குடிநீர் தேவையை நிறைவேற்றுதல் வேண்டும்.

பதித்தல் மற்றும் தாங்கி நிர்மாணிப்பதற்காக கூட்டுமொத்தமாக ரூபா 5,996,640 செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மக்களின் குடிநீர் தேவை நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை.		

3.5 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சேவையை விட்டுச் சென்ற 2023 ஆம் ஆண்டில் மீண்டும் சேவைக்கு அறிக்கையிட்ட ஊழியர் ஒருவர் 2024 பெப்ரவரி 21 ஆந் திகதி பேருவளை பிரதேச சபைக்கு இடமாற்றலாகிச் சென்றிருந்த போதிலும் அவரினால் சபையின் சேவைக் காலத்தில் அரசாங்கத்தின் சேவைக்கு தகுதியற்றதாக செயற்பட்டமை தொடர்பாக ஆரம்ப விசாரணைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.	ஆளுநரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தார்.	சேவைக் காலத்தில் அரசாங்க சேவைக்கு தகுதழ அற்றவராக செயற்பட்டமை தொடர்பான விசாரணை தொடர்பாக விசாரணை செய்தல் வேண்டும்.
(ஆ)	சபையில் வெற்றிடமாகக் காணப்படுகின்ற சுகாதார தொழிலாளர் பதவிக்காக 2023 யூன் 01 ஆந் திகதி உள்ளூராட்சி அமைச்சினால் நியமிக்கப்பட்ட சுகாதாரத் தொழிலாளர் சேவை, 2023 யூலை 07 ஆந் திகதி முதல் பாலிந்தநுகர சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தில் சேவையில் ஈடுபடுத்தி சபையினால் மீளாய்வாண்டில் சம்பனமாக ரூபா 579,600 செலுத்தப்பட்டிருந்தது.	ஆளநரின் கடிதத்தின் பிரகாரம் அமர்த்தப்பட்டிருந்தார்.	சபையின் கடமைகளுக்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில்	2025 ஆம் ஆண்டு முதல் செயல் நடவடிக்கை திட்டம்	ஆண்டில் அமுல்படுத்துவதற்கு

உள்ளடக்கப்படாத கூட்டுமொத்தமான ரூபா 633,235,230 ஆன 28 செயற்திட்டங்கள் சபையினால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.	காலாண்டு ரீதியில் திருத்தப்பட்டு உரிய செயற்திட்டங்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டங்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குதல் வேண்டும்.

4.2 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு மற்றும் நிதிப்பிரமானம் 133(1) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு, நிறுவனத்தின் செயற்பாடுகளை செயல் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் அவற்றின் செயலாற்றலைக் கட்டி எழுப்புவதற்காக உதவுகின்ற நடவடிக்கைகளை அமுல்படுத்த வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதும் சபையின் உள்ளகக் கணகாய்வினால் காணி உப கூறிடுதல், உறுதிப்படுத்தல், ஆதனவரி, கடை வாடகை அறவிடல், பெறுகைகள் போன்ற விடயங்கள் தொடர்பாக போதியளவான கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் சரி செய்யப்படும்.	போதியளவான உள்ளகக் கண்காய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ) எல்லா இடங்களிலும் காணப்படுகின்ற அணைத்து வகையான வறுமைகளையும் முடிவுக்கு கொண்டுவருதல் என்ற முதலாவது நிலைபேறான அபிவிருத்தி நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக 21 பேர்களின் பங்குபற்றலுடன் இலவசமாக சுயதொழில் வாய்ப்பு நிகழ்ச்சி திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் பங்கு பற்றிய தரப்பினரில்	எதிர்வரும் நிகழ்சித் திட்டங்களின் போது சுய வேலைவாய்ப்புகளுக்கு தொடர்புபடுவர்கள் மாத்திரம் பங்கு பற்றச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்	எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு முறையான வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும்.

	07 பேர் மாத்திரம் சுய தொழில்களில் ஈடுபட்டிருந்தமையால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு முறையான வேலைத் திட்டம் தேவை என அவதானிக்கப்பட்டது.		
(ஆ)	2030 வரையில் உயிர் வாழ்கின்ற மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் இரண்டாவது நிலைபேறான அபிவிருத்தி நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு உரிய செயற்பாடுகளின் செயல் முன்னேற்றம் ஆண்டின் இறுதியில் அளவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	முன்பள்ளிப் பாடசாலை மட்டத்தில் நிகழச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளது.	எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு முறையான வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும்.
(இ)	சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதாரம் என்ற 06 நிலைபேறான அபிவிருத்தி நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக 2024 பெப்ரவரி 28 ஆந் திகதி லத்பந்துர, கம்புராவல மற்றும் கட்டுபொத்த நீர் செயற்திட்டங்களின் நீர் மாதிரிகள் பரிசோதனைக்கு போக்குவரத்து கட்டணத்தை உள்ளடக்கிய ரூபா 26,437 தொகை நீர்வழங்கல் சபைக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் முழுமையான ஆய்வு மேற்கொள்ளப்படாமல் பக்றீரியா மற்றும் E-Coli பரிசோதனை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம்.	நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு உரிய பணிகளை சரியாக நிறைவேற்றுதல் வேண்டும்.